**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender : | | Miscellaneous | : | |
| Preliminary Register : | | Case No. | : | **S.C.19/2022** |
| Sessions : | | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 1** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | பழனிசாமி | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **08.08.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரியம்மாபாளையத்தில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி என் அண்ணன் பையன் ஆவார். இறந்துபோன கருப்பையா எனக்கு அண்ணன் ஆவார். 21.02.2021 ம் தேதி இரவு 11.00 மணிக்கு கத்தியால் என் அண்ணனை காட்டில் குடியிருந்தபோது வயிற்றில் குத்தினார். ஏண்டா இந்த மாதிரி பண்றாய் என்று நான் கேட்டபோது என்னுடைய விலாவில், கவுட்டியில், இடதுகையில் கத்தியால் தாக்கினார். தினமும் எதிரி குடித்துவிட்டு வந்த என்அண்ணனிடம் தகராறு செய்துகொண்டு இருப்பார். கொல்லையை விற்கவேண்டுமென்று சொல்லி தகராறு செய்வார். விற்கமுடியாது என்று என்அண்ணன் சொல்வார். குத்திய பின்னர் நானும், என்அண்ணனும் நடக்க தொடங்கினோம். ஓடை பக்கம் செல்லும் போது என்அண்ணன் விழுந்துவிட்டார். நான் கரம்பியம் போய் ஒரு பையனிடம் சொல்லி என் மகனிடம் தகவல் சொல்லி எல்லோரையும் அழைத்து வந்தார்கள். 108க்கு போன் செய்தார்கள். 108 வந்து பார்க்கும்போது என்அண்ணன் இறந்துவிட்டார். என்னை அரியலூர்

மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றேன். நான் அங்கு சிகிச்சையில் இருக்கும்போது போலிசார் வந்தார்கள். வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததாகும். அது அ.சா.ஆ.1, அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள். என்னிடம் காட்டப்படும் கத்திபோன்று தான் அன்று எதிரி வைத்திருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நானும், என்அண்ணனும் ஒரே வீட்டில் நடுவில் சுவர் வைத்து ஒருபக்கம் நானும், மற்றொரு பக்கம் என் அண்ணனும் இருந்தோம் என்றால், ஒருபக்கம் நானும், என்அண்ணனும், மற்றொரு பக்கம் எதிரியும் இருந்தார். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் தற்போது நான் சொன்னபடிதான் குடியிருந்து வந்ததாக சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் எதிரி முழு போதையில் இருந்தார் என்றால் சரிதான். புகாரில் நான் வீட்டில் தூங்கிகொண்டிருந்தபோது சத்தம்கேட்டு வெயியில் வந்து பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ தேதியில் குடித்துவிட்டு வந்து வேலைக்கு செல்லாமல் இப்படி இருக்கிறாய் என்று எதிரியுடன் அவர் மனைவி சண்டையிட்டார் என்றால் சரியல்ல. என்அண்ணனுக்கும் எதிரிக்கும் தான் சண்டை நடந்தது. அது எவ்வளவு நடந்தது என்று எனக்கு தெரியாது. என்அண்ணன் தான் என்னிடம் எதிரி குத்திவிட்டதாக சொன்னார். என்அண்ணன் எதிரி அவரை குத்திவிட்டதாக என்னிடம் சொன்னதாக புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொன்னேன். எதிரிக்கு சுமார் 5, 7 வயது இருக்கும்போது அவர் தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். இறந்துபோன கருப்பையா சுமார் 8 வருடம் வெளிநாட்டில் இருந்தார். எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை வெளிநாட்டில் இருந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. நாங்கள் இருந்தவீட்டிலிருந்து நாங்கள் நடந்து சென்ற ஓடை எவ்வளவு தூரம் இருக்கும்

என்றால் ஒரு ஏக்கர் செல்லும் தூரம் இருக்கும். அந்த ஓடையில் சகதி நிறைய இருந்ததால் நடக்க முடியாமல் என்அண்ணன் உட்கார்ந்து விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நடக்கமுடியும் தூரம் வரை நடந்தார். நான் ரத்தத்துடன் நடந்து சென்றேன். நான் கரம்பையில் உள்ள சின்னதுரை வீட்டிற்கு போனேன். அவர் எனக்கு உறவுமுறை ஆகும். என்வீட்டில் இருந்து சின்னதுரை வீடு சுமார் 3/4 கி.மீ தூரம் இருக்கும். சின்னதுரையிடம் தான் நான் முதலில் சம்பவம் பற்றி சொன்னேன். அவர் 108க்கு போன் செய்தாரா என்றால் நேராக சென்று அழைத்து வந்தார். மாத்தூர் சென்று அழைத்து வந்தார். மாத்தூருக்கும் கரம்பியத்துக்கும் இடைய 2 கி.மீ தூரம் இருக்கும். இதற்கிடையில் நான் ஆஸ்பத்திரி போகவில்லை. சின்னதுரை வீட்டில் உட்கார்ந்து இருந்தேன். என்னை எப்போது முதலில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால், சின்னதுரையும், என்மகனும் என்அண்ணனை பார்க்க சென்றார்கள். என்அண்ணனை பார்க்கும்போது அவர் இறந்துவிட்டார். அவரை மாறி, மாறி தூக்கிவந்தார்கள். 108க்கு தகவல் சொல்லி வந்தது. என்அண்ணனை பரிசோதித்து விட்டு அவர் இறந்துவிட்டது தெரிந்ததால் அதே 108ல் என்னை மருத்துவமனைக்கு சேர்த்தார்கள். ஓடையில் என்அண்ணனின் கையில் இருந்த செல்போன் லைட் வெளிச்சத்தை வைத்து என்அண்ணனும் என் மகனும் பார்த்தார்கள். என்னிடம் அப்போது செல்போன் கிடையாது. என்அண்ணனின் செல்போனை வாங்கி நான் பார்த்ததாக சொல்லும் சம்பவத்தை அங்கிருந்தபடியே சின்னதுரைக்கோ, என்மகனுக்கோ சொல்ல நான் முயற்சிக்கவில்லை. மருத்துவரிடம் நான் சிகிச்சையில் சேரும்போது கத்தியால் எனக்கு காயம் ஏற்பட்டதாக சொன்னேன். குச்சியால் ஏற்பட்டதாக சொல்லவில்லை. நான் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது போலிசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். இந்த வழக்கு பிரச்சனைக்கு பின்னர் எதிரியின் மனைவியும், குழந்தையும் எதிரியிடம் கோவித்து கொண்டு அவர் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். என் மனைவி பெயர் கனகா.

கருப்பையா மனைவி இறந்தபின்னர் என்மனைவியை அவர் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. வெளிநாட்டில் கருப்பையா இருந்தபோது பணத்தை கனகா பெயருக்கு அனுப்பினார் என்றால் சரியல்ல. சாட்சி பெரியசாமி மகன் முருகேசன் முன்னால் ஊர் தலைவர் ஆவார். எனக்கும், அவருக்கும் மனஸ்தாபம் கிடையாது. கருப்பையா வெளிநாட்டில் இருந்து வந்தபின்னர் தான் பணம் அனுப்பியதாக சொல்லி பிரச்சனையை எழுப்பி அது சம்மந்தமாக முருகேசன் பேசினாரா என்றால் இல்லை. என்அம்மா எதிரிக்கு எழுதிவைத்த சொத்தை பொறுத்து எதிரி விற்பனை செய்ய உரிமை உண்டு என்றால் சரியல்ல. கூட்டுபட்டாவாக உள்ளது. எதிரிக்கு குழந்தைகள் உள்ளது. எதிரிக்கு உண்டான சொத்தை சுமார் 4 வருடங்களாக நான் சேர்த்து அனுபவம் செய்து வருகிறேன். இந்தவழக்கு பிரச்சனைக்கு பின்னர் என்மகன் எதிரி மீது புகார் கொடுத்து அந்த வழக்கில் எதிரி சுமார் 1 வருடம் நீதிமன்ற காவலில் இருந்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்திற்கு பின்பு நானும், என்அண்ணனும் வீட்டிலிருந்து செல்லும்போது எதிரி வீட்டில் இருந்தார் என்றால் தூங்கிகொண்டு இருந்தார். வீட்டில் தூங்கி கொண்டு இருந்த எதிரியை போலிசார் அழைத்து சென்றனர். போலிசார் என்னை அன்று இரவே விசாரித்தார்கள். ஓடையில் இருந்த சேறு, சகதிகள் என்அண்ணனின் ஆடையில் பட்டது. என்னுடைய ரத்தம்பட்ட ஆடைகளை போலிசார் வாங்கவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில், விதத்தில் நான் சொல்வது போன்று எதிரி என்அண்ணனை தாக்க வில்லை என்றும், என்னையும் தாக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டதாக சொல்லும் காயங்கள் எதிரியால் ஏற்படவில்லை என்றால்சரியல்ல. வழக்கு சம்பவத்துக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.